# சுடர் ஒளி

THE SUDAR OLI

සුඩර් ඔළි

16.10.2020 வெள்ளிக்கிழமை


## புதினம் தெரியுமோ?

20 ஆவது திருத்தத்தைப் பெரும்பான்மையுடன் நிறைவேற்றுவோம் என்டு கூறிக்கொண்டிருந்த அரசு இப்ப திக்குமுக்காடிப் போய் நிக்குது. அதிலயும் 20க்கு எதிராகப் பல தரப்புகளிட்ட இருந்து கிளம்பியிருக்கிற எதிர்ப்பைப் பார்த்து ஜனாதிபதி கோத்தாபய திகைச்சுப் போயிருக்கிறாராம். அதிலயும் பௌத்த சங்கங்கள் 20க்கு எதிராக் கிளம்பும் என்டு அவர் கனவிலையும் 2



# இலங்கை முழுவதும் ஆபத்து!

## கொரோனாத் தொற்று வலயமாக அறிவிப்பு

கொழும்பு, ஒக்ரோபர் 16

இலங்கையின் தற்போதைய நிலைமையில் முழு நாட்டையும் கொரோனா வைரஸ் தொற்றும் வலயமாக அறிவிக்க நேரிட்டுள்ளது. இவ்வாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளரான பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்தார். 2



## இராஜதந்திர நெருக்கடிக்குள் மீண்டும் சிக்கிவிட்டது நாடு!!

### ஐக்கிய மக்கள் சக்தி விளாசல்

கொழும்பு, ஒக். 16

'இலங்கைக்கு எதிராக இராஜதந்திர நெருக்கடிகள் ஏற்படுவதற்கும், சர்வதேச அழுத்தங்கள் குவிவதற்கும் ராஜபக்ச அரசாங்கம், மீண்டும் வழிசமைத்துக்கொ 2

## தவறான முடிவெடுத்து குடும்பப்பெண் இறப்பு!

யாழ்ப்பாணம், ஒக். 16

கெற்பேலிப் பகுதியில் வசிக்கும் குடும்பப்பெண் ஒருவர் தவறான முடிவெடுத்து இன்று உயிரிழந்தார். கெற்பேலி மேற்கு மிருசுவிலைச் சேர்ந்த தியாகராசா புவனேஸ்வரி (வயது 2

## யாழில் கைக்குண்டுடன் இளைஞர் இன்று கைது

யாழ்ப்பாணம், ஒக். 16

யாழில் கைக்குண்டு வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் இன்று கைதுசெய்யப்பட்டார். யாழ்ப்பாணம் போதனா 2

## கொரோனா மூன்றாம் அலையில் வரும் நாள்கள் தீர்மானமிக்கவை

### மக்களின் கையில்தான் முடிவு இராணுவத் தளபதி அறிவிப்பு

கொழும்பு, ஒக். 16

'இலங்கையில் கொரோனாவின் மூன்றாவது அலையில் எதிர்வரும் நாள்கள் மிகவும் தீர்மானமிக்கவை. மக்கள் கொரோனாத் தொற்றுக்குள்ளாகாமல் தங்களைத் தாங்களே பாதுகாத்துக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியம் இவ்வாறு கொரோனா தடுப்புக்கான தேசிய செயற் 2

## கடல் ஆமையுடன் ஒருவர் கைதானார்

யாழ்ப்பாணம், ஒக். 16

கடல் ஆமையை வைத்திருந்த குற்றச்சாட்டில் மாதகல் பகுதியில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இளவாலை பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமையவே மேற்படி நபர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் இருந்து 35 கிலோகிராம் 2

## தொலைபேசி உரையாடலுக்கு கைதிகளுக்கு அனுமதி

கொழும்பு, ஒக். 16

சிறைக்கைதிகள் இன்று முதல் தங்கள் குடும்பத்தினருடன் தொலைபேசி ஊடாக உரையாட முடியும் என்று சிறைச்சாலைத்துறை தெரிவித்துள்ளது. கைதிகளுக்கு உளவியல் ரீதியான தாக்கத்தைக் குறைப்பதற்காக இத்தகைய 2

## பொலனறுவை மருத்துவமனையில் சிகிச்சை பெற்றவருக்கு கொரோனா

கொழும்பு, ஒக். 16

பொலனறுவை பொதுமருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த நபரொருவருக்கு கொரோனாத் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதையடுத்து பொலனறுவையில் மேலும் சில சமூகத் தொற்றுக்கள் இருக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. அத்துடன் மருத்துவமனையில் 2

## கொரோனா கட்டுக்குள் வரும்வரை திருத்தம் 20இனை கைவிடுங்கள்

கொழும்பு, ஒக். 16

அரசமைப்பின் 20ஆவது திருத்தச்சட்டவரைபை தற்காலிகமாக கைவிடுமாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை விடுத்துள்ளது. கொரோனா வைரஸ் பரவலைக் 2

## 3ஆவது அலையின் ஆரம்பப்புள்ளி வெளிநாட்டில் இருந்து வந்தவரா?

கொழும்பு, ஒக். 16

'வெளிநாட்டில் இருந்து வந்த ஒருவரே கொரோனா மூன்றாவது அலையின் ஆரம்பப் புள்ளியாக இருந்திருக்கலாம் என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இதுதான் இறுதி உறுதி எனக் கூறமுடியாது. எனவே, ஆரம்பப் புள்ளியை கண்டறிவதற்கான விசாரணை தொடர்கின்றது" என்று கொரோனா ஒழிப்பு தொடர்பான ஜனாதிபதி செயலணியின் தலைவர் இராணுவத் 2

## சுவர் இடிந்து வீழ்ந்து நபரொருவர் இறப்பு!

யாழ்ப்பாணம், ஒக். 16

அரியாலையில் கள்ள மணல் அள்ளும்போது, சுவர் இடிந்து விழுந்து நபர் ஒருவர் உயிரிழந்தார். யாழ்ப்பாணம் அரியாலை நாவலடி பகுதியில் இன்று அதிகாலை 4 மணியளவில் மணல் அள்ளும்போது வீட்டின் சுவர் இடிந்து வீழ்ந்ததில் இந்த மரணம் ஏற்பட்டுள்ளது என்று 2


சுட்டெரிக்கும் உண்மைகளை சுமந்து வரும் மாலை இதழ்

## இராஜதந்திர....

டுத்துள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளு மன்ற உறுப்பினர் ஹர்ஷண ராஜகருணா தெரிவித்தார்.
கொழும்பில் இன்று நடை பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையி லேயே அவர் மேற்கண்ட வாறு கூறினார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
'2010 2015 காலப்பகுதியில் மஹிந்த ராஜபக்ச ஆட்சி யின்போது நாட்டுக்கு கடும் இராஜதந்திர நெருக்கடிகள் ஏற்பட்டன. அமெரிக்காவால் எமது நாட்டுக்கு எதிராக பிரேரணைகூட கொண்டுவ ரப்பட்டது. அந்தப் பிரேர ணைக்கு ஆதரவாக இந்தியா வாக்களித்தது. ஜீ.எஸ்.பி வரிச்சலுகை இல்லாமல்போ னது. இப்படி பல நெருக்கடி கள் ஏற்பட்டன. தற்போது மீண்டும் அதேபோன்றதொரு நிலைமை உருவாக்கக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது.
சில நாள்களுக்கு முன்னர் சீன தூதுக்குழுவினர் இங்கு வந்தனர். அவர்கள் தனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தப்பட வில்லை. இந்த நிலையில் அமெரிக்க இராஜாங்க செயலாளரும் மாத இறுதி யில் நாட்டுக்கு வரவுள்ளார். சீன தூதுக்குழுவினர் ஏன் இங்கு வந்தனர், அதிக வட் டிக்கு கடன் வழங்கவா அல்லது எம்சீசீ உடன்படிக் கையில் கைச்சாத்திடவேண் டாம் என அழுத்தம் கொடுப் பதற்காகவா என கேட்கின் றோம்.
அதேபோல எம்.சி.சி உடன் படிக்கையில் கைச்சாத்திடு மாறு அழுத்தம் கொடுக்கவா அமெரிக்க இராஜாங்க செயலாளர் இங்கு வருகி றார் என்ற வினாவும் எழு கின்றது. இந்த அரசாங்கத் தின் ஆட்சிமுறைமையா லேயே நாட்டுக்கு சர்வதேச நெருக்கடிகள் ஏற்பட்டுள் ளன' என்றார். (ம-44)

## இலங்கை...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
'முழு நாடும் கொரோனா தொற்று வலயமாக அறிவிக்கப்பட்டாலும் இயல்பு வாழ்க்கைக்கு ஏதுவான வகையில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். அரச மற்றும் தனியார் நிறுவனங்களை வழமை போல் இயக்க முடியும். சுகாதார அதிகாரிகளின் ஆலோசனைகளுக்கு அமைய நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டியது நிறுவனங்களின் பிரதானிகள் கடமை. அதிகளவான ஊழியர்கள் பணியாற்றும் நிறுவனங்களில் தினமும் சேவைக்கு வரக் கூடிய ஊழியர்களின் எண்ணிக்கையை பிரதேச சுகாதார அதிகாரிகள் தீர்மானிப்பார்கள்.
இவ்வாறு வரும் ஊழியர்கள் முகக்கவசம் அணி வது, சமூக இடைவெளியைப் பேணுவது கட்டா யம் என்பதுடன் அடிக்கடி உடல் உஷ்ணத்தையும் கண்காணிக்க வேண்டும்' என்றார். (ம-22)

## தவறான முடிவெடுத்து...

56) என்பவரே உயிரிழந்தவராவார். கொடி காமம் பொலிஸார் மேலதிக விசார ணை களை மேற்கொண்டு வருகின்றனர். (ம-159)

## கொரோனா மூன்றாம்...

பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியு மான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
'கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்கள் தொடர்பிலும் நோய் அறிகுறிகள் இருப்பினும் உடனடியாக சுகாதாரப் பிரிவிடம் மக்கள் அறிவித்து ஆலோசனை பெறவேண்டும். கொரோனாத் தொற்றா ளர்கள் மற்றும் நெருங்கிச் செயற்பட்டவர்களுக்குத் தேவையான வைத்தியசாலைகள் மற்றும் தனிமைப்ப டுத்தல் நிலையங்கள் அவசியமான அளவு விரிவுபடுத்தப்பட்டுள்ளன. எதிர்வரும் நாள்களில் அதன் அவசியம் அதிகரித்தால் அதனை வழங்குவ தற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
கொழும்பு தேசிய தொற்று நோயியல் வைத்தியசா லையில் நோயாளிகளின் எண்ணிக்கை வரம்பை எட்டியுள்ளமையால் பல வைத்தியசாலைகளில் சிகிச்சை வழங்குவதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட் டுள்ளன' என்றார். நாட்டின் தற்போதைய நிலைமை எதிர்வரும் வாரங்களுக்குள் சீராகுமா என இராணுவத் தளபதியிடம் வினவியபோது, 'இது தொடர்பில் ஒன்றும் கூற முடியாது. இந்தச் சந்தர்ப்பத்தில் நாட்டு மக்களிடம் நாம் கேட்டுக்கொள்வது என்னவெனில், கொரோனாத் தொற்றுக்குள்ளாகாமல் தங்களைத் தாங்களே பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்பதே முக்கியமாகும்' என்று பதிலளித்தார். (ம-22)

## சுவர் இடிந்து...

தெரிவிக்கப்படுகின்றது. சின்னராசா நந்தீஸ்வ ரன் (வயது 45) என்பவரே உயிரிழந்தவராவார். குறித்த நபர் மேலும் இவருடன் இணைந்தே மணல் கொள்ளையில் ஈடுபட்டார் என்று மேலதிக விசாரணையில் தெரியவந்துள்ளது. இறந்தவருடன் இணைந்து மணல் அகழ்வில் ஈடுபட்ட இருவரும் தேடப்பட்டு வருகின்ற னர். (ம106)

## புதினம் தெரியுமோ?

நினைக்கேலையாம் கண்டியளே.
இந்தப் பௌத்த பீடங்கள் திடீரென பல்டி அடிச்சதுக்குப் பின்னால ஒரு கதை ஒண்டு உலாவுது சொல்லுறன் கேளுங்கோ. எல்லாம் மஹிந்தவின்ர கண் அசைவிலதான் நடக்குதாம் கண்டியளே. கோத்தாபயவும், மஹிந்தவும் மேடையில ஒருத்தர ஒருத்தர் கட்டிப்பிடிச்சுக் கொஞ்சினாலும் உள்ளுக்குள்ள புகைச்சுக் கொண்டுதான் இருக்குதாம். அதிலையும் 20ஆம் திருத்தம் எண்ட பெயரில தன்னட்ட இருக்கிற பவர் எல்லாத்தையும் கோத்தாபய பிடுங்கிறார் எண்டு மஹிந்தர் கடுப்பாத்தான் இருக்கிறாம். ஆனால் என்ன நேரடியா வெளியில சொல்ல முடியாத நிலைமை.
அதுதான் தான் பின்னுக்கு நிண்டு கொண்டு விளையாட்டுக் குடுக்க ஆரம்பிச்சிருக்கிறாம் கேட்டியளே. என்னதான் சொன்னாலும் பௌத்த பிக்குகளிண்ட ஆதரவு பெற்ற ஒராள் எண்டா மஹிந்தர் தான். அதுத்தது கரு. கோத்தாபயவுக்கு அந்தளவுக்குச் செல் வாக்கெல்லாம் இல்லை கண்டியளே. மஹிந்தர் தன்ர இரண்டாவது இன்னிங்ஸை விகாரையில இருந்துதான் ஆரம்பிச்சவர் ஞாபகம் இருக்கோ.
கோத்தாபயவுக்கு நிர்வாகத்தில இருக்கிற திறமை, அரசியலில இல்லை கண்டியளே. மஹிந்தர் அதில படு சுட்டிதானே. அதுதான் நசுக்கிடாம வேலையைக் காட்ட ஆரம்பிச்சிருக்கிறார். அப்ப கோத்தாபய மட்டும் சளைச்சவரோ? இந்த தகிடுதத்த வேலையள பாத்து கோத்த பாயவும் தன்ர வித்தையைக் காட்ட ஆரம்பிச்சிட்டாராம். மஹிந்தர் முதல் தன்ர சகோதரங்கள், எம்.பிக்கள் எண்டு எல்லாருக்குப் பின்னாலயும் புலனாய்வு ஆக்கள இறக்கி விட்டிருக்கிறாராம். அவ் வளவு சந்தேகம் ஆளுக்கு. ஒவ்வொருத்தரிட்ட அசைவுகளையும் உன்னிப்பாப் பாத்துக் கொண்டிருக்கிறாராம். ஆளுக்காள் தங்கட வித்தையளக் காட்ட இப்பதானே வெளிக்கிட்டிருக்கினம். இனிப் போகப் போக நல்ல பம்பலா இருக்கும் கண்டியளே.
– பட்சி

## கடல் ஆமையுடன்...

நிறையுடைய கடல் ஆமை மீட்கப்பட்டுள்ளது. குறித்த கடல் ஆமையை இறைச்சியாக்குவதற்கு முற்பட்ட வேளை யிலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப் பட்ட நபரை மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம-25)

## கொரோனா கட்டுக்குள்....

கட்டுப்படுத்தி நாட்டினதும், மக்களினதும் சுகாதார பாது காப்பை உறுதிப்படுத்துவதற்கே தற்போதைய சூழ்நிலையில் முன்னுரிமை வழங்கப்படவேண்டும்.எனவே, 20ஆவது திருத்தத்தை தற்காலிகமாகவேனும் கைவிட வேண்டும் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு வலியுறுத்தியுள்ளது.
கொரோனா நெருக்கடிக்கு மத்தியில் '20'ஐ விவாதத்துக்குட்படுத்தினால் அச்சட்டவரைபு சார்ந்த விட யங்கள் தொடர்பில் உரிய வகையில் கருத்துகளை வெளியிட முடியாது. 20 தொடர்பில் பரந்தபட்ட கலந்துரையாட லொன்று அவசியம். இதன்காரணமாகவே நாடு வழமைக்கு திரும்பிய பின்னர் அது தொடர்பில் பரிசிலிக்குமாறு கோரு கின்றோம் எனவும் எம்.பிக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.
அதேவேளை, 20ஐ முன்நோக்கி கொண்டுசெல்லாமல் புதிய அரசமைப்பை இயற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண் டும் என மதத்தலைவர்களால் விடுக்கப்பட்ட கோரிக்கையை அரசாங்கம் சாதகமான முறையில் பரிசிலிக்க வேண்டும் எனவும் ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பிக்கள் கோரிக்க விடுத் துள்ளனர். (ம44)

## யாழில் கைக்குண்டுடன்...

மருத்துவமனைக்கு முன்பாக மோட்டார் சைக்கிளில் சந்தே கத்திற்கிடமாக நின்ற இளைஞ ரிடம் இருந்தே மேற்படி கைக்குண்டு மீட்கப்பட்டது. கைது செய்யப்பட்டவர் கிளி நொச்சி - பரந்தன் பகுதியைச் சேர்ந்தவர். அவரிடம் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.
முதல்கட்ட விசாரணையில் மோட்டார் சைக்கிள்களைத் திருடுவதற்காகவே யாழ்ப்பா ணத்துக்கு அவர் வருகை தருவ தாகவும், கைக்குண்டைக் காட்டி மிரட்டித் திருட்டில் ஈடுபடுவதாகவும், ஏற்கனவே இரண்டு மோட்டார் சைக்கிள் களை இவ்வாறு திருடியுள்ள தாகவும் சந்தேக நபர் தனது முதல்கட்ட விசாரணையில் தெரிவித்துள்ளார் என்று தெரிய வருகின்றது. (ம-106)

## 3ஆவது அலையின்...

தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா இன்று தெரிவித்தார்.
கொரோனா 3ஆவது அலையின் ஆரம்பப்புள் ளியைக் கண்டறிவதற்கான விசேட ஆய்வு நட வடிக்கை முன்னெடுக்கப்பட்டது. தற்போது பல நாட்கள் ஆகின்றன. எனவே, எவ்வாறு வைரஸ் தொற்று ஆரம்பமாகியது என்பது கண்டறியப்பட்டதா என எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே இராணு வத் தளபதி மேற்கண்டவாறு கூறினார்.
இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது, 'ஆரம்பப்புள்ளி தொடர்பில் பல்வேறு விதமான தகவல்கள் கிடைத்துள்ளன. ஆடைத்தொழிற்சாலை ஊழியர்களிடம் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படை யில் அவர்கள் சிற்சில இடங்களில் தங்கியுள் ளனர் என்பது தெரியவந்துள்ளது.
அதேபோல வெளிநாட்டில் இருந்து வந்த ஒருவரால் வைரஸ் பரவியிருக்கக்கூடும் என்ற தகவலும் கிடைத்துள்ளது. இது தொடர்பி லும் ஆராய்ந்து பார்ப்போம். எனினும், இதுதான் ஆரம்பப்புள்ளி என்பதை இன்னும் உறுதியாக கூறமுடியாதுள்ளது. எதிர்காலத் தில் நிச்சயம் உரிய தகவல் அறிவிக்கப்படும்.
அதேவேளை, வைரஸ் பரவலை கட்டுப்படுத் துவது தொடர்பிலேயே புலனாய்வுப் பிரிவி னர் தற்போது கூடுதல் கவனம் செலுத்தியுள் ளனர்' என்றார். (ம-44)

## பொலனறுவை...

இருந்த பணியாளர் கள், தாதியர்கள், மருத்துவர்கள் என சுமார் 50 பேர் தனிமைப்படுத்தப் பட்டுள்ளனர். அவர்களிடம் பி.சி. ஆர் சோதனைகள் மேற்கொள்ளப்பட வுள்ளன. (மஇ)

# பரீட்சைகள் முடிந்ததும் தனியார் பஸ்கள் ஓடாது

## தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் அறிவிப்பு

கொழும்பு,ஒக்.16

க.பொ.த. உயர்தரப் பரீட்சைகள் முடிந்ததும், எந்தவொரு தனியார் பஸ்களும் சேவையில் ஈடுபடாது என்று தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

க.பொ.த. உயர்தரப் பரீட்சைகள் அடுத்த மாதம் 9ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளன. அதன் பின்னர் எந்தவொரு தனியார் பஸ்களும் இயக்கப்படமாட்டாது.

கொரோனா வைரஸ் நெருக்கடியால் தனியார் பஸ் உரிமையாளர்கள் தொழிலை முன்னெடுக்க முடியாது கடுமையான நெருக்கடியை எதிர்கொண்டு வருகின்றனர்.

உரிய அதிகாரிகளிடம் எமது கோரிக்கைகளை முன்வைத்தும், எந்தவொரு தீர்வும் கிடைக்கவில்லை. இதன் காரணமாக தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடத் தீர்மானித்துள்ளோம்.

கொரோனா நெருக்கடியை எதிர்கொண்டுள்ள தனியார் பஸ் உரிமையாளர்களுக்கு எந்த நிவாரணமும் இதுவரை கிடைக்கவில்லை. தனியார் பஸ் தொழிற்சங்கங்கள் முன்வைத்த திட்டங்களுக்கு அரசு முறையான பதில்களையும் அளிக்காமையால், தனியார் பஸ் தொழில் கடுமையான நெருக்கடியைச் சந்தித்துள்ளது.

கொரோனா தொற்று பரவுவதற்கு முன்னர் தினமும் 21 ஆயிரம் தனியார் பஸ்கள் இயக்கப்பட்டிருந்தன. ஆனால், கொரோனாவின் பின்னர் 12 ஆயிரம் வரையான பஸ்களே இயக்கப்படுகின்றன. இந்நிலை மேலும் மோசமடையும் சூழ்நிலையே காணப்படுகிறது. என்றார். (க-இ)

## தொலைக்காட்சி பணியாளருக்கு கொரோனா?

கொழும்பு,ஒக்.16

சுயாதீன தொலைக்காட்சி சேவையின் பணியாளர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டிருக்கலாம் எனச் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. ஒளிப்பதிவாளராகப் பணிபுரியும் ஊழியர் ஒருவரே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளார். இதனையடுத்து அவருடன் நெருங்கிப் பணியாற்றியவர்களை தனிமைப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் முன் னெடுக்கப்பட்டுள்ளன. (க-இ)

## தென் மாகாணத்தில் 922 பேர் தனிமைக்கு

கொழும்பு,ஒக்.16

கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டிருக்கலாமென்ற சந்தேகத்தின் பேரில், 922 பேர் தென் மாகாணத்தில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்று மாகாண சுகாதார சேவைகள் இயக்குநர் மருத்துவர் சந்திமா சிறிதுங்க தெரிவித்துள்ளார்.

காலி மாவட்டத்தில் 348 பேரும், மாத்தறை மாவட்டத்தில் 328 பேரும், ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் 246 பேரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன் சுகாதார சேவைகள் இயக்குநரின் மாவட்ட அலுவலகங்கள் பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்வதற்குப் பயன்படுத்தப்படுகின்றன. அந்தவகையில் காலி மாவட்டத்தில் இதுவரையான காலப்பகுதியில் 3 ஆயிரத்து 382 பேருக்கு பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மாத்தறை மாவட்டத்தில் 2 ஆயிரத்து 78 பேருக்கும் ஹம்பாந்தோட்டையில் ஆயிரத்து 71 பேருக்கும் இதுவரை பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

## தனிமைப்படுத்தப்பட்ட 53,011 பேர் விடுவிப்பு

கொழும்பு,ஒக்.16

தனிமைப்படுத்தலை முழுமையாக நிறைவு செய்த 397 பேர் இன்று விடுவிக்கப்பட்டுள்ளனர். அதற்கமைவாக 53 ஆயிரத்து 11 பேர் இதுவரை விடுவிக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை முப்படையினரால் பராமரிக்கப்பட்டு வரும் 84 தனிமைப்படுத்தல் நிலையங்களில் 9 ஆயிரத்து 556 பேர் தொடர்ந்தும் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர்.

அத்துடன் ஆஸ்திரேலியாவின் சிட்னியில் இருந்து இன்று நாடு திரும்பிய 12 பேருக்கு பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)

## ஹெரோய்னுடன் ஐவர் கைது

மட்டக்களப்பு,ஒக்.16

வாழைச்சேனை பொலிஸ் பிரிவில், ஹெரோய்ன் போதைப் பொருளுடன், வெவ்வேறு இடங்களைச் சேர்ந்த ஐவர் இன்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதற்கமைய பிறைந்துறைச் சேனைப் பிரதேசத்தில் மூன்று இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து 10 கிராம் ஹெரோய்ன் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

செம்மண்ணோடை கிராமத்தில் இரண்டு இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து 999 மில்லி கிராம் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது என்று வாழைச் சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தனஞ்ஜய பெரமுன தெரிவித்தார்.(க-150)





## வெண்பிரம்பு தினம் கிளிநொச்சியில்!

கிளிநொச்சி, ஒக்.16

கிளிநொச்சியில் சர்வதேச வெண்பிரம்பு தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது. இந்த நிகழ்வு கிளிநொச்சி லயன்ஸ் கழகத்தின் தலைவர் சு.யதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில், வன்னி விழிப்புலனற்றோர் சங்கத்துடன் இணைந்து சர்வதேச வெண்பிரம்பு தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் விழிப்புலனற்றோர்கள் அழைத்துக் கௌரவிக்கப்பட்டதுடன், அவர்களுக்கு விருந்து பசாரங்களும் வழங்கப்பட்டன. (ந-ரி2)

## பாதசாரிகள் கடவைக்கு வெள்ளை வர்ணம்

முல்லைத்தீவு, ஒக்.16

பரந்தன் முல்லைத்தீவு ஏ35 வீதியிலுள்ள பாதசாரிகள் கடவை அனைத்துக்கும் வெள்ளை வர்ணம் பூசும் பணி வீதி அபிவிருத்தி அதிகார சபையினரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதுவரை காலமும் ஏ35 வீதி பாதசாரிகள் கடவைகள் மஞ்சள் வர்ணத்திலிருந்து வந்த நிலையில், தற்போது வெள்ளை வர்ணம் பூசப்பட்டு வருகின்றது. (ந-ரி1)



## 31 வரையில் தியேட்டர்கள் திறக்காது

கொழும்பு, ஒக்.16

நாட்டிலுள்ள அனைத்துத் திரையரங்குகளையும் இந்த மாதம் 31ஆம் திகதிவரை மூடுமாறு திரைப்படக் கூட்டுத்தாபனத் தலைவர் அறிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள கொரோனாத் தொற்று நிலைமை காரணமாக சுகாதார அமைச்சு விடுத்துள்ள அறிவுறுத்தலுக்கு அமைய இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

# கொரோனாத் தொற்றால் இ.போ.சவுக்கு படுநட்டம்!

*கொழும்பு, ஒக்.16*

கொரோனாத தொற்று நிலைமை காரணமாக இலங்கைப் போக்கு வரத்துச் சபையின் நாளாந்த வருமானம் 30 மில்லியன் ரூபா வால் வீழ்ச்சியடைந்துள்ளது என்று இலங்கை போக்குவரத்துச் சபையின் பிரதி முகாமை யாளர் எச்.ஏ.பண்டுக தெரிவித்துள்ளார். கொரோனாத் தொற்று நிலை மைக்கு முன்னதாக இலங்கை போக்குவரத்துச் சபையின் அன்றாட வருமானம் 75 மில்லியன் ரூபாவாகக் காணப் பட்டது. கொரோனா தொற்றின் பின்னர் வருமானம் 45 மில்லியன் ரூபாவாகக் குறைந்துள்ளது.

கொரோனாத் தொற்று நிலை மைக்கு முன்னதாக 5 ஆயிரத்து 100 பஸ்கள் சேவையில் ஈடுபட் டன. தற்போது 4 ஆயிரத்து 500 பஸ்களே சேவையில் ஈடுபடுகின் றன என்றும் அவர் தெரிவித் தார். (எ-இ)



# ரியாட்டுக்கு எதிராக மல்கம் ரஞ்சித் மனு!

*கொழும்பு, ஒக்.16*

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் சகோதரரான ரியாட் பதியுதீனைக் கைது செய்வதைத் தடுக் கும் கட்டளையைப் பிறப்பிக்கக் கூடாது என்று கோரி நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் சார்பில் அவ ரது சட்டத்தரணி மேன்முறையீட்டு நீதிமன்றில் இந்த இடையீட்டு மனு வைத் தாக்கல் செய்துள்ளார்.

ரியாட் பதியுதீன் தொடர்பாக மீண்டும் விசாரணைகளை முன்னெடுப்பதற்குப் பதில் பொலிஸ் மா அதிபருக்கு கட்ட ளையிட வேண்டும் என்றும் அந்த மனுவில் கோரப்பட்டுள்ளது. (எ-இ)

# மின்தூக்கி உடைந்து இருவர் சாவு

*கொழும்பு, ஒக்.16*

கண்டி, லேவெல்லவில் புடவைக் கடை ஒன் றின் மின்தூக்கி உடைந்து வீழ்ந்ததில் இருவர் உயிரிழந்துள்ள னர். இந்தச் சம்பவம் இன்று காலை 9 மணியளவில் நடந்துள் ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாகப் பொலி ஸாரால் மேலதிக விசாரணைகள் முன் னெடுக்கப்பட்டு வருகின்றன.(எ-இ)

# ரியாட்டின் மனுவின் மீது 20ஆம் திகதி விசாரணை

*கொழும்பு, ஒக்.16*

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் தான் கைது செய்யப் படுவதற்குத் தடை விதிக்கக் கோரி நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் சகோதரர் ரியாட் பதியுதீன் தாக்கல் செய்த ரிட் மனு எதிர்வரும் 20ஆம் திகதி விசார ணைக்கு எடுக்கப்படவுள்ளது.

இந்த மனு இன்று மஹிந்த சமய வர்தன மற்றும் அர்ஜுன ஒபேசே கர ஆகிய நீதிபதிகள் முன்னிலை யில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த மனு அவசர தேவைக்காகத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், உடனடியாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று மனுதாரர் சார்பில் முன்னி லையான சட்டத்தரணி மன்றில் தெரிவித்தார். இந்த மனுவை எதிர்வரும் 20ஆம் திகதி விசார ணைக்கு எடுத்துக்கொள்ள மேல் நீதிமன்று தீர்மானித்தது.(எஇ)

# சந்தேகநபர் உயிரிழப்பு பொலிஸார் பணிநீக்கம்

*கொழும்பு, ஒக்.16*

தடுப்புக்காவலில் இருந்த சந்தேநகர் உயிரி ழந்ததை அடுத்து பூகொட பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரி கள் இருவர் பணிநீக்கம் செய்யப்பட்டுள் ளனர். பொலிஸ் பரிசோதகர் ஒருவரும், பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவருமே பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

களவுச் சம்பவம் ஒன்று தொடர்பாகக் கடந்த 11ஆம் திகதி கைதுசெய்யப்பட் டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்த 21 வயது இளைஞர் ஒருவர் திடீரென உயிரிழந்த சம்பவம் தொடர்பாகவே அவர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இந்த இளை ஞன் திடீர் உடல் நலக் குறைவு ஏற்பட்டு ராகம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்திருந்தார். (எ-இ)



# உள்நாட்டு வெங்காயம் கொள்வனவு

*கொழும்பு, ஒக்.16*

பெரிய வெங்காயத்தை விவசாயிகளிடம் இருந்து கொள்வனவு செய்வதற்கு அரசு தீர்மானித்துள்ளது என்று தகவல் வெளியாகி யுள்ளது.

மாவட்டச் செயலகங்கள் ஊடாக இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள் ளது என்றும், ஒரு கிலோ பெரிய வெங்காயம் 100 ரூபாவுக்குக் கொள்வனவு செய்யப்படும் என்றும் தெரி விக்கப்பட்டது.(எ-இ)

# பக்லே மஹிந்த சந்திப்புப் பேச்சு



*கொழும்பு, ஒக்.16*

பிரதமர் மஹிந்த ராஜபக்சவுக்கும், இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பக்லேக்கும் இடையே சந்திப்பொன்று நடந்துள்ளது.

இந்தச் சந்திப்பு அலரி மாளிகை யில் நேற்று நடந்தது என்று பிரதம ரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள் ளது. இந்தச் சந்திப்பில் இலங்கை யில் இந்திய அரசின் உதவியுடன் முன்னெடுக்கப்பட்டுவரும் பல் வேறு அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக விரிவாகக் கலந்துரை யாடப்பட்டது. பாடசாலைகள் மற்றும் மிகவும் பின்தங்கிய பிரதே சங்களில் முன்னெடுக்கப்பட வெண்டிய குடி தண்ணீர் திட்டங்கள் தொடர்பாகவும், பிரதமர் இந்தி யத் தூதுவ ருடன் கலந்துரையாடி யுள்ளார். சுகாதாரம், சூழல் பாது காப்பு, மழை நீர் சேகரிப்பு, கழிவுநீர் முகாமைத்துவம் ஆகிய விடயங்கள் தொடர்பில் அதிக முக்கியத்துவம் கொடுத்துக் கலந்து ரையாடப்பட்டது. இந்த விடயங் கள் தொடர்பாக விரைவான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்ப டும் என்று இந்தித் தூதுவர் கோபால் பாக்லே பிரதமருக்கு உறுதியளித்தார் என்று ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (எ-இ)

# தொழில் ஆணைக்குழு பணிப்பாளராக பிரபாத்!

*கொழும்பு,ஒக் 16*

தொழில் ஆணைக்குழுவின் ஆணையா ளர் நாயகமாக பிரபாத் சந்ரகீர்த்தி நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் முன்னதாக கரையோர பாது காப்புத் திணைக்கள பணிப்பாளராகக் கடமையாற்றியிருந்தார். இவர் தொழில் ஆணைக்குழுவின் ஆணையா ளராக இந்த மாதம் 19ஆம் திகதி தனது கடமைகளைப் பொறுப்பேற் பார் என்று தெரிவிக்கப்பட்டது.(எஇ)

# பி.சி.ஆர். இயந்திரங்கள் புதிதாகக் கொள்வனவு!

*கொழும்பு, ஒக்.16*

கொரோனா தொற்றுப் பரிசோதனை மேற்கொள்ளும் பி.சி. ஆர். பரிசோதனை இயந்திரங்கள் நாட்டுக்குக் கொண்டுவரப்பட்டுள் ளன.

ஐந்து பி.சி.ஆர். இயந்திரங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன என்று சுகாதார அமைச்சின் ஊடகப் பேச்சாளர் மருத்துவர் ஜயருவன் பண்டார தெரிவித்துள்ளார்.

இந்த இயந்திரங்களில் இரண்டு கட்டுநாயக்க விமான நிலையத்தில் நிறுவப்படவுள்ளன என்றும், ஏனையை 3 இயந்திரங்கள் அவற் றின் தேவை அதிகம் உள்ள பகுதி களுக்கு அனுப்பப்பட உள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.



# காணி அபகரிப்புகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை

## கமால் குணரத்ன கூறுகிறார்

கொழும்பு, ஒக்.16

“காணி அபகரிப்பு நடவடிக்கைகளுக்கு ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை. சட்டவிரோதச் செயற்பாடுகளில் ஈடுபடுவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்”

இவ்வாறு பாதுகாப்புச் செயலர் மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன தெரிவித்துள்ளார்.



உள்ளக பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் இடர் முகாமைத்துவ இராஜாங்க அமைச்சில் நேற்று நடத்தப்பட்ட மாவட்டச் செயலர்களுடனான சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

தொல்பொருள் முக்கியத்துவம் மிக்க இடங்கள் தொடர்பில் மாவட்டச் செயலர்கள் விழிப்புடன் இருக்க வேண்டும். நில விவகாரத்தில் தங்கள் அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தும் அரச அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேவேளை, பாதுகாப்புப் படைகள், சுகாதாரத் திணைக்களம் மற்றும் அரச நிர்வாக சேவை அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் கொரோனா மூன்று அலைகளையும் எம்மால் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடிந்துள்ளது. என்றார்.(எ-இ)

# ‘புலிஅம்மா’வின் இறுதி வணக்க நிகழ்வு

கிளிநொச்சி, ஒக்.16

‘புலிஅம்மா’ அல்லது சரசம்மா என்று அழைக்கப்படும் நாட்டுப்பற்றாளர் யோகராசா சரஸ்வதி அன்னையின் இறுதிவணக்க நிகழ்வு நேற்று முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் இடம்பெற்றது.

தாய்த்தமிழ் பேரவையின் இணைப்பாளர் ச.ரூபன் தலைமையில் இந்த நினைவு வணக்கம் இடம்பெற்றது.

இவர் திருமலையில் பிறந்து முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மண்ணில் வாழ்ந்து வந்தவராவர். எம்தேச வீரர்களுக்கு உணவூட்டி, அடைக்கலம் கொடுத்து பாதுகாத்த வீரத்தாய் கடந்த காலங்களில் பெண்களுக்கென உரக்கக் குரல் கொடுத்தவர். 2009 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கு முன்னர் அன்னையர் முன்னணி எனப் பல பணிகளை மேற்கொண்டவராவர்.

இந்த நினைவு வணக்கத்தில், வணக்க உரையை திருகோணமலை மாவட்டம் சார்பாக முன்னாள் போராளி குட்டியும், கவிஞர் யோ.புரட்சியின் கவி கலந்த வணக்க உரையும், புதுக்குடியிருப்பு வணிகர் சங்கத்தின் தலைவர் த. நவநீதன், மற்றும் புதுக்குடியிருப்பு மக்கள் சார்பாக த.தனமும் உரை நிகழ்த்தினர்.

வணக்க உரைகளைத் தொடர்ந்து, அன்னையின் உடல் புதுக்குடியிருப்பு மயானத்தில் தீயுடன் சங்கமமாகியது.

இந்த இறுதி நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் விநோனோதராதலிங்கம், புதுக்குடியிருப்பு வணிகர்கள், திருகோணமலை மாவட்ட மக்கள் முன்னாள் போராளிகள், கல்விச் சமூகத்தினர், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டு வணக்கம் செலுத்தினர். (ற-222)



# உணவுப்பொதி விற்றவருக்கு கொரோனா

கொழும்பு,ஒக்.16

வத்தளை, ஹெந்தலைச் சந்தியில் உணவுப் பொதிகளை விற்பனை செய்யும் ஒருவருக்கு, கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவரது மனைவி பிரன்டிக்ஸ் நிறுவனத்தின் பணிபுரிந்து வரும் நிலையில், அவருக்கு ஏற்கனவே கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. தற்போது அவருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.


இவர் கடந்த 3 ஆம் திகதி வரை ஹெந்தலைச் சந்தியில் உணவுப் பொதிகளை விற்பனை செய்துள்ளார். அந்தக் காலப்பகுதியில் அவரிடம் உணவுப் பொதிகளைப் பெற்றவர்கள், உடனடியாக அருகில் உள்ள பொது சுகாதாரப் பரிசோதகருக்கு அல்லது பிரதேச சுகாதார அதிகாரிக்கு அறிவிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.(க-இ)



## மருத்துவ உபகரணங்களை வழங்கியது அமெரிக்கா

கொரோனா பாதுகாப்பு அங்கிகள் உள்ளிட்ட மருத்துவ உபகரணங்கள் அடங்கிய ஒரு தொகுதி பொதிகளை இலங்கைக்கு அமெரிக்கா வழங்கியுள்ளது. சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சியிடம், அமெரிக்கத் தூதுவர் அலெய்னா ரெப்லிட்ஸ் பொதிகளைக் கையளித்தார்.

1,91000 அமெரிக்க டொலர் பெறுமதியான பொதிகளே இவ்வாறு சுகாதார அமைச்சரிடம் கையளிக்கப்பட்டுள்ளன. (க-இ)




## ஆபத்தான பகுதிகள்: வரைபடம் வெளியீடு

கொழும்பு,ஒக்.16

இலங்கையில் கொரோனா வைரஸால், அதிக ஆபத்துள்ள பகுதிகளை, சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு வரைபடமாக வெளியிட்டுள்ளது.

சுகாதாரப் பகுதிகளின் மருத்துவ அதிகாரிகளின் வகைப்படுத்தல், பதிவான வழக்குகளின் எண்ணிக்கை மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட மையங்களின் எண்ணிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் வரைபடம் வெளியிடப்பட்டுள்ளது.

இந்தத் தரவுகள் கடந்த 14 நாள்களில் எடுக்கப்பட்ட எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(க-இ)

# மீன் வியாபாரிக்கு கொரோனா தொற்று

கொழும்பு,ஒக்.16

கிரிந்திவெல - குட்டிகலப் பகுதியில் மீன் வியாபாரி ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மீன் வியாபாரியுடன் நெருங்கிப் பழகிய சுமார் 80 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்று தொம்பே பொது சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்துள்ளார்.

மீன் வியாபாரி குட்டிகல, ரந்தாவான, மெத்தேகம, போகஹகும்புர, கிரிந்திவெல மற்றும் பெபில்வெல ஆகிய பிரதேசங்களில் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.(க-இ)

## ஊரடங்கை மீறிய 167 பேர் கைது

கொழும்பு,ஒக்.16

கம்பஹாவில் பொலிஸ் தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவை மீறிய 167 பேர் இதுவரை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 24 மணித்தியாலங்களில் மாத்திரம் 25 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்ட கடந்த நான்காம் திகதி முதல் இன்று வெள்ளிக்கிழமை காலை ஆறு மணி வரையான காலப்பகுதியிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (க-இ)

## ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்று இடம்பெற்றது

திருகோணமலை, ஒக்.16

திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் இணைத்தலைவர்களான கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் மற்றும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அத்துக்கோரல தலைமையில் மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது பல வருடகாலமாக பயிர்செய்யப்பட்டு வந்த காணிகள் இம்முறை பயிர்செய்ய முற்படும்போது வனப்பாதுகாப்பு திணைக்களம் உட்பட துறைசார் நிறுவனங்கள் மூலம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுகிறது எனத் தெரிவிக்கப்பட்டது. பிரச்சினைக்குரிய காணிகள் தொடர்பில் தீர்மானங்களை எடுக்க பிரதேச செயலக மட்டத்தில் பிரதேச செயலாளரின் தலைமையில் துறைசார் அதிகாரிகளைக் கொண்ட குழுவொன்றை ஏற்படுத்தி அவற்றின் சிபாரிசின் அடிப்படையில் காணிகளில் பயிர் செய்யல் தொடர்பான தீர்மானம் மேற்கொள்ளப்படல் வேண்டும் என்று இதன்போது தீர்மானிக்கப்பட்டது. (வ-இ)

## மதுப் போத்தல்களுடன் ஒருவர் கைது

திருகோணமலை, ஒக்.16

20 சட்டவிரோத மதுபான போத்தல்களுடன் திருகோணமலை தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பரவிப்பாஞ்சான் பகுதியில் சந்தேகநபர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் கந்தளாய் பதினாறாம் கொலணி பகுதியைச் சேர்ந்த 41 வயதுடையவர் எனவும் கசிப்பு உற்பத்தி செய்து அதனை விற்பனை செய்துள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். இந்த விடயம் தொடர்பில் தம்பலகாமம் விசேட பொலிஸ் பிரிவினருக்கு இரகசிய தகவல் கிடைத்ததையடுத்து அந்தப் பகுதியைச் சுற்றிவளைத்த பொலிஸார் சந்தேகநபரை கைது செய்துள்ளதுடன் அவரிடமிருந்து 20 சட்டவிரோத மதுபான போத்தல்களையும் கைப்பற்றியுள்ளனர்.

சந்தேகநபர் ஏற்கனவே பல குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர் எனவும், இவருக்கு எதிராக வழக்குகள் கந்தளாய் நீதிமன்றில் இடம்பெற்று கொண்டிருப்பதாகவும் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. (வ-இ)

# கைது முயற்சியை அறிந்ததும் வாகனத்தை கைவிட்டுவிட்டு தப்பிச் சென்றாராம் ரிஷாத்

### சி.ஐ.டி. தகவல் கூறுகின்றது

கொழும்பு, ஒக். 16

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ரிஷாத் பதியுதீன் தான் விரைவில் கைதுசெய்யப்படுவேன் என தனது வாகனத்திலுள்ள வானொலிச் செய்தி மூலம் அறிந்து புத்தளம் - சிலாபம் வீதியில் வாகனத்தைக் கைவிட்டு விட்டு தப்பித்தார் எனக் குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் விசாரணையின்போது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

ரிஷாத் கடந்த 13ஆம் திகதி புத்தளத்திலிருந்து கொழும்புக்கு வந்திருந்தார். பயணத்தின்போது தனது வாகனத்திலுள்ள வானொலியில் ஒலிபரப்பான தனியார் வானொலி அலைவரிசை ஒன்றின் செய்தியை செவிமடுத்துக் கொண்டிருந்தார் எனக் குற்றப்புலனாய்வு திணைக்களவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சட்டமா அதிபர் பொலிஸாருக்கு உடனடியாக பதியுதீனை கைதுசெய்து காவலில் வைக்குமாறு அறிவித்தார் என அந்தச் செய்தி அமைந்திருந்தது. உடனே சாரதியிடம் புத்தளம் - சிலாபம் வீதியில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் வாகனத்தை நிறுத்துமாறு கூறியதுடன் உடன் அதிலிருந்து வெளியேறி பிறிதொரு வாகனத்தில் புத்தளத்துக்குத் தப்பினார். இது குற்றப்புலனாய்வு திணைக்கள விசாரணையில் கண்டறியப்பட்டுள்ளது.

இந்தநேரத்தில் ரிஷாத்தின் பாதுகாப்புக்கு வாகனத்தில் இருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் சந்தேகநபரான ரிஷாத் பதியுதீன் தப்பிச்செல்ல உதவிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டுள்ளார். பின்பு, முன்னாள் அமைச்சரின் அதிசொகுசு ஜீப்பை குற்றப் புலனாய்வு திணைக்களத்தினர் பறிமுதல் செய்ததுடன் அதிலிருந்த இரு சாரதிகளையும் கைதுசெய்துள்ளனர். வாகனத்தில் உள்ளே கண்டெடுக்கப்பட்ட இரு துப்பாக்கிகள் மற்றும் ரவைகள் குறித்து விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன.

தற்போது ரிஷாத் பதியுதீனைத் தேடும் நடவடிக்கையில் குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் ஆறு பொலிஸ் குழுக்கள் ஈடுபட்டுள்ளன. இதேவேளை, கொழும்பில் நேற்று ரிஷாத் பதியுதீனின் மனைவியிடம் குற்றப்புலனாய்வு திணைக்களத்தினர் நீண்ட வாக்குமூலத்தைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-22)

## நியூ டைமன்ட் கப்பல் கப்டனின் பயணத் தடையை நீக்க உத்தரவு

கொழும்பு, ஒக்.16

அண்மையில் தீப்பரவலுக்கு உள்ளான எம்.டி.நியூ டைமன்ட் கப்பல் கப்டனுக்கு விதிக்கப்பட்டிருந்த வெளிநாட்டு பயணத் தடையை நீக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் கேட்டுள்ளது. கப்பலின் கிரேக்க இன கப்டனான திரோஸ் ஹில்லியாஸ் சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணிகள் முன்வைத்த இடையீட்டு மனு மீதான விசாரணை கொழும்பு பிரதம நீதவான் மொஹமட் மிஹார் முன்னிலையில் இன்று இடம்பெற்றது.

இதன்போது கப்டன் சார்பாக மன்றில் முன்னிலையான சட்டத்தரணிகள், தமது கட்சிக்காரர் பிழையை ஒப்புக்கொண்டு 12 மில்லியன் ரூபா தண்டப் பணத்தை கொழும்பு மேல் நீதிமன்றில் செலுத்தி முடித்துள்ளார். அதனால் தமது கட்சிக் காரருக்கு எதிராக விதிக்கப்பட்டுள்ள வெளிநாட்டு பயணத் தடையை நீக்குமாறு கப்டன் சார்பில் கேட்டுக்கொண்டனர். இதற்கு குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் எந்த எதிர்ப்பையும் தெரிவிக்கவில்லை. அதன்படி கப்பல் கப்டனுக்கு விதிக்கப்பட்டிருந்த வெளிநாட்டு பயணத் தடையை நீக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (வ-இ)

## இரு ஆண்டுகளின் பின் சந்தேகநபர் கைது

கிளிநொச்சி, ஒக்.16

சிறுமி ஒருவரைத் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய குற்றச்சாட்டுடன் தொடர்புடைய நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கடந்த 2011 ஆம் ஆண்டு இயக்கச்சி பகுதியில் 14 வயது சிறுமியொருவர் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் அந்த நபர் இரண்டு வருடமாகப் பொலிஸாரால் தேடப்பட்டு வந்தநிலையில் இயக்கச்சிப் பகுதியில் வைத்து நேற்றைய தினம் பளை பொலிஸாரால் அவர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் முற்படுத்திய போது 14 நாட்கள் தடுப்புக் காவலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (வ-113)

## சஜித்திடம் வாக்குமூலம் பெறும் வகையில் குற்றப்புலனாய்வு திணைக்களம் நடவடிக்கை

கொழும்பு, ஒக். 16

வாக்குமூலம் பெற்றுக்கொள்ளும் நோக்கில் குற்றப்புலனாய்வு பிரிவினர், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் வீட்டுக்குச் சென்றுள்ளனர் என்று கொழும்பு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.



நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவும் தொலைபேசி ஊடாக கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளார் என கூறப்படுகின்றது.

இந்த நிலையிலேயே இதுகுறித்து வாக்குமூலம் பெற்றுக்கொள்ளும் நோக்கில் குற்றப்புலனாய்வு பிரிவினர், சஜித் பிரேமதாசவின் வீட்டுக்கு சென்றுள்ளார் எனக் குறிப்பிடப்படுகின்றது.

## ஓய்வுபெறும் வயதெல்லையை உயர்த்துவதற்கு அரசு கரிசனை

கொழும்பு, ஒக்.16

தனியார் துறையில் ஓய்வுபெறும் வயதெல்லையை 60ஆக உயர்த்துவது தொடர்பாக கவனம் செலுத்தப்படும் என தொழில் அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா தெரிவித்துள்ளார். தொழில் அமைச்சில் நேற்று இடம்பெற்ற தொழில் ஆலோசனை சபைக் கூட்டத்தின்போது முன்வைக்கப்பட்ட இந்த பிரேரணை தொடர்பாக கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் வயது முதிர்ந்தவர்களின் சனத்தொகை வெகுவாக அதிகரித்து, இளம் வயதினரின் வீதம் குறைந்து செல்வதன் மூலம் எதிர்கால தொழில் ஆளணியில் பெரும் வெற்றிடம் ஏற்படலாம். இதனால், உலகில் ஏனைய நாடுகளைப்போன்று ஓய்வுபெறும் வயதை அதிகரிப்பதைக் கருத்திற்கொண்டு, தகைமையுள்ள ஊழியர்களின் சேவையைத் தொடர்ந்து பெற்றுக் கொள்ளும் நோக்கில், தனியார் துறை ஊழியர்களின் ஓய்வுபெறும் வயதெல்லையை 60வரை அதிகரிக்க கவனம் செலுத்துவோம் என அவர் தெரிவித்துள்ளார். (வ-இ)

# தாய்லாந்து அரசுக்கு எதிராக மீண்டும் வெடித்தது போராட்டம்



பாங்கொக், ஒக்.16

தாய்லாந்து அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் மீண்டும் தீவிரமடைந்துள்ளன. அரச சட்டங்களை உடன் மீள் சீர்திருத்த வேண்டுமெனவும் பிரதமர் ரியுத் வான் ஒவா உடன் பதவி விலக வேண்டுமென்றும் தாய்லாந்தின் பெங்கோக் நகரை ஆக்கிரமித்துள்ள ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர்.

2014 ம் ஆண்டு இராணுவ புரட்சியினால் அதிகாரத்துக்கு வந்த தற்போதய பிரதமர் மீண்டும் அதிகாரத்தை கைப்பற்றியதனால் ஜனநாயகம் கடும் நெருக்கடிக்கு உட்பட்டுள்ளது என ஆர்ப்பாட்டக்காரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். அரசை விமர்சிப்பது பெரும் தண்டனைக்குரிய குற்றமாக இருந்த போதிலும் பல வாரங்களாக ஆர்ப்பாட்டக்காரர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. (வ-இ)



## ஒஸ்கார் வென்ற முதல் இந்தியர் காலமானார்

இந்தியாவில் முதல் முதலாக ஒஸ்கார் விருது வாங்கிய ஆடை வடிவமைப்பாளரான பானு அதையா தனது 91 வயதில் உயிரிழந்துள்ளார்.

1983 ஆம் ஆண்டு வெளியான காந்தி படத்துக்கு சிறந்த முறையில் ஆடைகளை வடிவமைத்தமைக்காக பானு அதையாவுக்கு ஒஸ்கார் விருது கிடைத்தது. 2012 ஆம் ஆண்டில் அவருக்கு மூளையில் கட்டி இருப்பது கண்டறியப்பட்டது.

அண்மைக் காலமாக உடல்நிலை சரியில்லாமல் இருந்த அவர் நேற்று உயிரிழந்துள்ளார். ஏறக்குறைய ஐந்து தசாப்தங்களாக நீடித்த ஒரு வாழ்க்கையில் சிறந்த திரைப்பட தயாரிப்பாளர்களுக்கான ஆடைகளை வடிவமைப்பதில் அதையா புகழ் பெற்று இருந்தார். பானு அதையாவின் மறைவுக்கு திரையுலகினர் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளனர். (வஇ)

## பீகார் சட்டசபைத் தேர்தல் கருத்துக்கணிப்புத் தடை

பீகாரில் சட்டப் பேரவைத் தேர்தல் கருத்துக்கணிப்பு முடிவுகளை வெளியிடுவதற்கு ஊடகங்களுக்கு மட்டுமல்லாது, ஜோதிடர்கள், ஓலைச்சுவடி பார்ப்பவர்கள், அரசியல் ஆய்வாளர்கள் ஆகியோருக்கும் தடைவிதித்துள்ளது தேர்தல் ஆணையம். பீகாரிலுள்ள 243 தொகுதிகளுக்கும் சட்டப் பேரவைத் தேர்தல் 3 கட்டங்களாக நடக்கவுள்ளது. இம்மாதம் 28 ஆம் திகதி, நவம்பர் 3 ஆம் திகதி, நவம்பர் 7 ஆம் திகதிகளில் வாக்குப்பதிவு இடம்பெறவுள்ளதுடன், நவம்பர் 10 ஆம் திகதி வாக்குகள் எண்ணப்படவுள்ளன. (வ-இ)



## பதவி விலகினார் கிர்கிஸ்தான் ஜனாதிபதி

பிஷ்கேக், ஒக்.16

எதிர்ப்புப் போராட்டங்களை யடுத்து கிர்கிஸ்தான் ஜனாதிபதி சூரோன்பாய் ஜீன்பெகோவ் பதவி விலகியுள்ளார். கிர்கிஸ்தானில் சமீபத்தில் நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் எந்த கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை. இதனால் கடும் அதிர்ச்சி அடைந்த ஏனைய 12 கட்சிகளும் தேர்தல் முடிவுகளை ரத்து செய்யக்கோரி பொதுமக்களுடன் இணைந்து போராட்டத்தில் குதித்தன. தலைநகர் பிஷ்கெக்கில் உள்ள நாடாளுமன்ற கட்டடத் தொகுதியும் ஜனாதிபதியின் அலுவலகமும் தாக்கப்பட்டன. இதே வேளை, ஜனாதிபதி சூரோன்பாய் ஜீன்பெகோவ் பதவி விலக வேண்டும் என்றும் எதிர்க்கட்சிகள் தொடர்ந்து வலியுறுத்தி வந்தன. போராட்டத்தில் ஏற்பட்ட மோதல்களில் குறைந்தது ஒருவர் இறந்துள்ளதுடன், 1,000 க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

இந்நிலையில், ரத்தம் சிந்திய மற்றும் தனது சொந்த குடிமக்களை சுட்டுக் கொன்ற ஜனாதிபதியாக நான் தரம் தாழ்ந்து செல்ல விரும்பவில்லை என தெரிவித்து பதவி விலகியுள்ளார் சூரோன்பாய் ஜீன்பெகோவ். (வஇ)

## நீட் பெறுபேறுகள் இன்று வெளிவரும்

புதுடில்லி, ஒக்.16

இந்தியாவில் மருத்துவக் கல்விக்கான நுழைவுப் பரீட்சையான நீட் தேர்வின் பெறுபேறுகள் இன்று வெளியாகவுள்ளன. இரண்டு கட்டமாக நடத்தப்பட்ட இந்தப் பரீட்சையில் 14 லட்சத்து 37ஆயிரம் பேர் தோற்றியுள்ளனர். பரீட்சைப் பெறுபேறுகள் தேசிய பரீட்சை முகாமைத்துவ ஆணையகத்தின் இணையத்தளத்தில் வெளியிடப்படும் என மத்திய கல்வி அமைச்சர் ரமேஷ் பொக்ரியால் அறிவித்துள்ளார். (வ-இ)

# குத்துச்சண்டை வீராங்கனைக்கு கொரோனா

புதுடில்லி, ஒக்.16

இந்திய குத்துச்சண்டை வீராங்கனை லவ்லினா போர்கோஹைன் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளார்.

டோக்கியோ ஒலிம்பிக் போட்டிக்குத் தயாராகும் வகையில் 16 இந்திய குத்துச்சண்டை வீர, வீராங்கனைகள் இத்தாலி, பிரான்ஸ், போலந்து உள்ளிட்ட நாடுகளில் 52 நாள்கள் சுற்றுப்பயணம் செய்து பயிற்சி மற்றும் போட்டிகளில் பங்கேற்கவுள்ளனர். இதற்காக இந்திய அணியினர் நேற்று இத்தாலி புறப்பட்டு சென்றனர்.

டெல்லியில் இருந்து புறப்படுவதற்கு முன்னதாக குத்துச்சண்டை அணியினருக்கு நடத்தப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் உலக சம்பியன்ஷிப் போட்டியில் 2 முறை வெண்கலப்பதக்கம் வென்றவரும், ஒலிம்பிக் போட்டிக்குத் தகுதி பெற்று இருப்பவருமான இந்தியாவைச் சேர்ந்த 23 வயது வீராங்கனையான லவ்லினா போர்கோஹைன் கொரோனாவால் பாதிக்கப்பட்டு இருப்பது உறுதியானது.

இதையடுத்து அவர் இத்தாலி செல்லவில்லை. அவரைத் தனிமைப்படுத்தி சிகிச்சை அளித்து வருகின்றனர். (ற)

